மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது போல் மாவட்ட நீதிமன்றத்தில் கட்டிட வசதி இருக்கிறது. எனவே உயர் நீதிமன்றம் மூலமாக இந்த சம்மர் வெக்கேஷன் முடிந்தவுடன் அங்கே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வடக்கன்குளத்தில் பத்திரப் பதிவு அலுவலகம்.

*1904 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடக்கன்குளத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தியக்கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி. உறுப்பினர் இடத்தில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் அவர்களுக்குப் பதிலாகக் கேட்கப் போகிறீர்களா ? வடக்கன் குளமா ? திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வடக்கன்குளம் வளர்ந்து வருகிற ஒரு நகரம். அதைச் சுத்தி ஏராளமான சின்னச் சின்ன ஊர்கள் இருக்கின்ற காரணத்தினாலே பத்திரப் பதிவிற்கு எல்லோருமே வள்ளியூர் தான் வரவேண்டியிருக்கிறது. எனவே வடக்கன்குளத்திலே அப்படி ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தை நிறுவுவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தை வடக்கன்குளத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். வடக்கன்குளத்தில் சார் பதிவாளர் அலுவலகம் துவங்குவது குறித்து சாத்தியக்கூறு தொடர்பாக மாவட்டப் பதிவாளரிடம் கோரப்பட்டதில் வடக்கன்குளத்தில் சார் பதிவாளர் அலுவலகம் துவக்கினால் ஆண்டுக்கு சராசரி 1035 ஆவணங்கள் மட்டும் பதிவாகக் கூடும் என்றும் வருவாய் 59,625 ஆக இருக்கும் என்றும், செலவு 99 ஆயிரமாக இருக்கும் என்றும், தற்போதைய புள்ளிவிவரத்தின்படி வருவாயை விட செலவினம் அதிகமாக இருக்கும் என்றும் மேலும் பணகுடி மற்றும் ராதாபுரம் ஆகிய சார் பதிவாளர் அலுவலகங்களி

லிருந்து கிராம மக்கள் வடக்கன்குளத்திற்கு மாற்றப்படும் பட்சத்தில் மேற்படி பழைய சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப் பதிவு மற்றும் ஆண்டு வருவாய் பாதிப்பதோடு போதிய வேலைப் பளுவும் இராது என்பதால் வடக்கன்குளத்தில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு இல்லை.

இனாம் ஒழிப்புச் சட்டம்.

*** 2926 திரு. கே. ரவி அருணன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இனாம் கோடாறங்குளம், சிவந்திபுரம் கிராமங்கள் அரசினரால் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டதால் அதன் பயனை பயிரிடும் விவசாயிகள் அடைய முடியாதபடி இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், இனாம் கோடாரங்குளம், சிவந்திபுரம் கிராமங்களை 1963ஆம் வருடத்திய இனாம் ஒழிப்புச் சட்டம் 28/63ல் அரசு எடுத்துக்கொண்டது தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. வழக்கின் முடிவிற்கு ஏற்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

9–25 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 25 ஆண்டுகள் ஆகியும் அந்தப் பலனை விவசாயிகள் அடையமுடியாதபடி இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இதுபோன்ற வழக்குகள் இல்லாமல் இருக்க ஏதாவது சட்டத் திருத்தம் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் இப்பொருள் பற்றி சட்டமன்றப் பேரவையில் விரிவாக விவாதிப்பது நல்லதல்ல என்று நான் கருதுகின்றேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கின் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.